# திருக்குடும்பப் பெருவிழா

# மூன்றாவது திருவழிபாடு ஆண்டு

# 2024-12-29

(இன்றைய வாசகங்கள்:

சாமுவேல் முதல் நூலிலிருந்து வாசகம். 1:20-22.24-28,

பதிலுரைப்பாடல் 84: 1-2. 4-5. 8-9,

யோவான் எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம் 3:1-2.21-24,

லூக்கா எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம் 2:41-52)

## திருப்பலி முன்னுரை

இறைமக்கள் அனைவருக்கும் திருக்குடும்பப் பெருவிழா நாளாகிய இன்று அத் திருக்குடும்பபம் போன்று இறை அன்பிலும், அருளிலும் நிறைந்து, திருமகன் இயேசுவின் அன்பு மக்களாய் அனைவரும் இணைந்து நல்வாழ்வு வாழ அன்புடன் வாழ்த்துகிறேன். குடும்பம் ஒரு கோவில். அதில் கணவனும் மனைவியும் தீபங்கள். அந்தத் தீபத்தின் ஒளிதான் குழந்தைகள். இவ்வாறு அனைவரும் ஒன்றுபட்டு ஒளிமயமான வாழ்வை உருவாக்க நமக்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டாகத் திருக்குடும்பம் அமைந்திருக்கிறது. குழந்தை என்னும் பயிர் வளமாக வளர வேண்டுமென்றால் அதன் விளைநிலமான குடும்பம் உருப்படியாக இருக்க வேண்டும். எனவே நமது குடும்ப வாழ்வை இன்றைய இறைவார்த்தையின் ஒளியில் சிந்திப்போம். கணவன் மனைவி பிள்ளைகள் என்ற மூன்று சக்திகளும் அன்பில் சங்கமிக்கும் ஆலயம். அந்தச் சக்தியை உற்பத்தி செய்கிறவர் இயேசுகிறிஸ்துவே. வசதிகளையும் செல்வங்களையும் சோப்பது அல்ல. மாறாக பாசங்களையும், உறவுகளையும் சேர்ப்பதுதான் குடும்பம். இதற்கு அடிப்படை தேவை ஒருவரையொருவர் புரிந்து கொள்ளுதல், விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை, இரங்கும் உள்ளம் இத்தகைய உயரிய பண்புகளை நம் உள்ளத்தில் கொண்டு நம் குடும்ப வாழ்வைத் தொடர இத் திருக்குடும்பப் பெருவிழா திருப்பலிக் கொண்டாட்டங்களில் மகிழ்ச்சியுடன் கலந்துக் கொண்டு இறையருளையும் இரக்கத்தையும் மன்றாடுவோம்.

## விசுவாசிகள் மன்றாட்டுகள்:

*விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.*

*பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.*

*வழிநடத்தும் இறைவா!*

*எம் திருத்தந்தை, ஆயர்கள் குருக்கள், அருட்சகோதரிகள், அருட்சகோதரர்கள் மற்றும் பொதுநிலையினரை ஆசீர்வதித்து அவர்களின் தெய்வீகப் பணி சிறக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.*

*அன்பின் ஊற்றே எம் இறைவா!*

*குழந்தைச் செல்வத்திற்காக எங்கி எதிர்பார்த்துக் காத்திருக்கும் ஒவ்வொருவரையும் ஆசீர்வதியும். அன்னா கருவற்று சாமுவேலைப் பெற்று ஆண்டவருக்கு நன்றி கூறியது போல் எங்களையும் மாற்றியருள வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*தாய் தந்தையரை மதித்து நட என்று போதித்த இறைவா!*

*நாங்கள் எங்கள் பெற்றோர்களை மதித்து, முதிர்ந்த வயதில் அவர்களது தேவைகளை நிவர்த்தி செய்யும் மக்களாக எங்களை மாற்ற வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*எங்கள் கேடயமாகிய இறைவா!*

*இந்நாளில் இந்த ஆலயத்தில் வந்து உமக்கு ஆராதனை செய்யவும், நன்றி பலி செய்யவும் அருள் புரிந்திரே! இனிவரும் நாட்களிலும் உம்மைப் பின்பற்றி உம்மிடம் அடைக்கலம் புக வேண்டிய அருளைப் பொழிய வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*உம்மீது அன்பு செலுத்துவது போல் உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்பு செலுத்து என்று கூறிய இறைவா!*

*நாங்கள் பிறரை அன்பு செய்து வாழவும். உதவி செய்யவும் வேண்டிய மனதினைத் தந்தருள வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*அன்புள்ள ஆண்டவரே!*

*இங்கு கூடியிருக்கும் எம் அனைவரையும் உமது பாதம் ஒப்புக்கொடுத்து செபிக்கின்றோம். பண்புகள் நிறைந்த குடும்பங்கள் உருவாகவும், பாசத்தை விதைக்கும் உறவுகள் உருவாகவும், அன்பினால் அடித்தளமாகும் அழகான சமூகம் உருவாகவும், அனைவரையும் அரவணைக்கும் மனங்கள் பெருகவும் வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*

*இன்றைய சிந்தனை*

''*இம்மீட்பே பிற இனத்தாருக்கு வெளிப்பாடு அருளும் ஒளி'' (லூக்கா* 2:32)

*இயேசுவைக் கோவிலில் அர்ப்பணிக்க அவருடைய பெற்றோர் கொண்டு செல்கின்றனர். அவ்வேளையில் சிமியோன் என்னும் இறையடியார் கடவுளைப் போற்றிப் புகழ்ந்து பாடிய பாடலை லூக்கா தருகிறார் (லூக்* 2:28-32). *இப்பாடல் கடவுளின் வல்லமை மிக்க செயல்களைப் போற்றுவதோடு அவரிடமிருந்து வருகின்ற ''ஒளி'' பற்றியும் பறைசாற்றுகிறது. கடவுளை ஒளியாகப் பார்*h*க்கின்ற முறை விவிலியத்தில் ஆங்காங்கே காணப்படுகிறது. இயேசு இவ்வுலகில்*

ஒளியாக வந்தார் என யோவான் விவரிக்கிறார் (யோவா 1:9-10). ஒளி இருளை அகற்றுகிறது; நமக்கு வெளிச்சம் தருகிறது. வெறும் பொருண்மையளவிலான ஒளிக்கு இந்த சக்தி உண்டு என்றால் கடவுள் உள்ளொளியாக வரும்போது நம் அக இருள் அகல்வதை நாம் உள்ளத்தில் உணரலாம்.

இருள் நம்மைவிட்டு அகலும்போது நம் பார்வை தெளிவுபெறும். நம் வாழ்விலும் நம்மைச் சூழ்ந்திருப்போர் வாழ்விலும் கடவுளின் செயல் துலங்குவதை நாம் காண்போம். அப்போது நம் குறுகிய பார்வை விரிவுபெறும். கடவுளின் பார்வை நமதாக மாறும். அனைத்துமே ஒரு புதிய ஒளியில் தோன்றும்போது நமது பழைய கண்ணோட்டங்களும் மதிப்பீடுகளும் மறைந்துபோய் புதியதொரு நிலைக்கு நாம் ஏறிச் செல்ல முடியும். பிற இனத்தைச் சார்ந்த நாம் இனி கடவுளின் குடும்ப உறுப்பினராக மாறிவிட்டதால் நம்மில் அவருடைய ஒளி பளிச்சிட்டு விளங்கிட நம்மையே அவரிடம் கையளிப்பது தேவை. அங்கே கடவுள் என்னும் வெளிப்பாடு தோன்றும். அது நம்மை உள்ளத்தையும் வாழ்வையும் ஒளிர்விக்கும். இவ்வாறு ஒளிபெற்ற நாம் ஒருவர் ஒருவருக்கு ஒளியாகிட அழைக்கப்படுகிறோம். கிறிஸ்து என்னும் ஒளியில் ஒளிர்கின்ற மனிதர் இருளை அகற்றும் கருவிகளாக மாறுவர். மெழுகுதிரி ஏற்றப்பட்டு, பிற திரிகளையும் ஏற்றுகின்ற திறம் பெறுவதுபோல நம் வாழ்வு அமைய வேண்டும். அப்போது கிறிஸ்துவின் ஒளி எங்கும் பரவும்; மனிதரும் கடவுளின் வெளிப்பாட்டினைத் தம் உள்ளத்திலும் இல்லத்திலும் சமூக வாழ்விலும் அனுபவித்து அறிவர்.

மன்றாட்டு:

இறைவா, உம் ஒளியில் நாங்கள் வழிநடக்க அருள்தாரும்.